

முதலமைச்சர் அவர்கள், சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில் அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், கீழப்பழுவூர் ஊராட்சியில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இந்தி திணிப்பினை எதிர்த்துப் போராடி முதன் முதலில் உயிர்த் தியாகம் செய்த மொழிப்போராட்டத் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அரங்கத்தினை திறந்து வைத்ததை தொடர்ந்து, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரங்கத்தில் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.க.ரா.மல்லிகா, மொழிப்போராட்டத் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களின் துணைவியார் திருமதி. கமலம் மற்றும் குடும்பத்தினர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று முன்தினம் (13.02.2026) சேலம் மாநகராட்சி, 47வதுவார்டில், நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.37 இலட்சம் மதிப்பில் கருவாட்டு மண்டி பிரதான சாலையில் 500 மீட்டர் நீளத்திற்கு தார்சாலை அமைக்கும் பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா. இளங்கோவன், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, கொண்டலாம்பட்டி மண்டல உதவி ஆணையர் தமிழ்வேந்தன், கொண்டலாம்பட்டி மண்டலக் குழுத்தலைவர் அசோகன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### ரூ.1 கோடியே 18 லட்சத்து 53 ஆயிரத்தில்

# திருவெறும்பூர் தொகுதியில் முடிவுற்ற பணிகள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

திருச்சி, பிப். 15-

திருவெறும்பூர் தொகுதி மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு கோடியே 18 லட்சத்து 53 ஆயிரம் மதிப்பீட்டில் பல்வேறு முடிவுற்ற பணிகளை மக்களுக்கு அர்ப்பணித்தும் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வண்ணம் பல்வேறு பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார் தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி



திருவரம்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது திருவரம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட் பட்ட நவல்பட்டு அண்ணா நகர் அரசு பள்ளியில் ரூபாய் 3 லட்சம் மதிப்பீட்டில் புதிய கழிவறை அமைப்பதற்கான பூமி பூஜை மற்றும் நாவல்பட்டு பர்மா காலனியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக 50 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட புதிய சுகாதார வளாகத்தையும் திறந்து வைத்தார் மேலும் இதனையடுத்து நவல்பட்டு பர்மா காலனியில் 3 லட்சம் மதிப்பீட்டில் அரசு துவக்கப் பள்ளியில் புதிய கழிவறை இதேபோல் பழங்கனாங்குடி ஊராட்சியில் 7.20 லட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அடிக்கல் நாட்டு விழா பூமி பூஜையிலும் கலந்து கொண்டார் .

மேலும் இதே போல் காந்தலூர் ஊராட்சியில் 7 லட்சத்து 56 ஆயிரம் மதிப்பீட்டில் அரசு துவக்கப் பள்ளியில் கட்டி முடிக்கப்பட்ட புதிய சமையலறையை திறந்து வைத்தும், கிருஷ்ண சமுத்திரம் ஊராட்சியில் 16 லட்சத்து 90 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய வடிகால் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டியும்,அதே ஊராட்சியில் 7 லட்சத்து 56 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட புதிய சமையலறையை திறந்து வைத்தார் வேங்கூர் ஊராட்சியில் 9 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய சீரனி அரங்கத்திற்கு அடிக்கல் நாட்டி பல்வேறு முடிவுற்ற பணிகள் மற்றும் புதிய பணிகளுக்கான பூமி பூஜை விழாவிலும் கலந்து கொண்டார் தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மேலும் இந்நிகழ்வில் திட்ட இயக்குனர் கங்காதரணி திருவெறும்பூர் தாசில்தார் தனலட்சுமி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆனந்த் மற்றும் அண்ணாதுரை திருவெறும்பூர் வடக்கு மற்றும் தெற்கு ஒன்றிய செயலாளர்கள் கருணாநிதி, கங்காதரன் உட்பட கழக நிர்வாகிகள் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர்

எதிரணியினருக்கு தான் தேர்தல் பயம்.

மக்களுக்கான நலத்திட்டங்களை சூழ்ச்சி செய்து யார் தடுக்க நினைத்தாலும் அதனை முறியடிப்பார் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின்.அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டி:

திருச்சி திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் நிறைவுற்ற வளர்ச்சி பணிகளை தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது,

இன்று தமிழக முதல்வர் மு க ஸ்டாலின், இது வெறும் குட் மார்னிங் அல்ல சூப்பர் குட் மார்னிங் என்று தனது பேச்சை ஆரம்பித்தார்.

ஏறத்தாழ 9,089 பேருக்கு பணி ஆணை வழங்கக்கூடிய நிகழ்வில் மிகப்பெரிய அறிவிப்பை தமிழக முதல்வர் அறிவித்தார்.

தேர்தல் நேரத்தில் மத்திய அரசின் சூழ்ச்சியால் மகளிர் உரிமைத் தொகை வழங்குவதை நிறுத்தலாம்.

இதனால் NDA கூட்டணி வெற்றி பெறலாம் என்ற நினைப்பில் சூழ்ச்சி செய்ய பார்க்கிறார்கள். அதையும் சர்ஜிகல் ஸ்டிரைக் என்று சொல்லக்கூடிய அளவில் அடுத்த இரண்டு மாதத்திற்கு வரவேண்டிய மகளிர் உரிமைத்தொகை 2000 ரூபாயை அவர்கள் நிறுத்த முடிவு செய்தால் , அதையும் சேர்த்து யாரிடம் சொல்லாமல் உடனடியாக 5000 ரூபாயை அறிவித்தார்.

எங்களுக்கு தேர்தல் பயம் கிடையாது எதிரணியினருக்கு தான் தேர்தல் பயம். மக்களுக்கான நலத்திட்டங்களை சூழ்ச்சி செய்து யார் தடுக்க நினைத்தாலும் அதனை முறியடித்து தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் நல மக்களுக்கான பணிகளை செய்வார்.

அமித்ஷா உள்ளிட்டோர் அடிக்கடி தமிழ்நாட்டிற்கு வருகை தர வேண்டும் என முதலமைச்சரும் துணை முதல்வரும் சொல்லியுள்ளார்கள். அவர்களை நாங்கள் வரவேற்கிறோம்.

ஏற்கனவே நாடாளுமன்றத் தேர்தலில் அவர்கள் வந்து சென்றதால் தான் நாங்கள் 40 இடங்களை தக்க வைத்தோம்.

அதேபோல் அவர்கள் அடிக்கடி வந்தால் கடந்த தேர்தலை விட சட்டமன்ற தேர்தலில் நிச்சயம் 200இடங்களை கடந்து வெற்றி பெறுவோம்.

திமுகவுக்கு எதிராக என்.டி.ஏ கூட்டணி ஆர்ப்பாட்டம் நடத்துவது அவருடைய தேர்தல் ஸ்டெரன்த் காட்டுகிறது என்ன பேட்டியில் தெரிவித்தார்.

### புனித சூசையப்பர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 442 மாணவிகளுக்கு மிதிவண்டிகள்,

# தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியில் பயிலும் 859 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

சேலம், பிப். 15-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் (13.02.2026) சேலம் மாநகராட்சி, சூரமங்கலம், புனித சூசையப்பர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 442 மாணவிகளுக்கு மிதிவண்டிகளையும், தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியில் பயிலும் 859 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எதிர்கால தலைமுறையினரான மாணவ, மாணவிகள் உலகளவிலான கல்வியைக் கற்று பயனடையும் வகையில் நான் முதல்வன், உயர்வுக்குப் படி, புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், இல்லம் தேடிக்கல்வி திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மிதிவண்டிகள் வழங்கும் திட்டம், உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான ஆட்சியின் காரணமாக இந்திய அளவில் மேற்கொண்ட கணக்கெடுப்பின் படி, இந்தியாவில் உள்ள சிறந்த 100 கல்லூரிகள் கணக்கெடுப்பில் தமிழ்நாட்டில் உள்ள 37 கல்லூரிகள் இடம் பெற்றுள்ளன. அதே போல் சிறந்த 100 பல்கலைக்கழகங்களில் தமிழ்நாட்டில் உள்ள 24 பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் அனைத்துத்துறைகளிலும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை பெற்று தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

கல்வியையும், மருத்துவத்தையும் இரண்டு கண்களாக கருதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 5 ஆண்டுகளில் பள்ளிக்கல்வித்துறைக்கு சுமார் ரூ.2 இலட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். உயர்கல்வித்துறைக்கும் எண்ணற்ற திட்டங்களை வழங்கி வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் 14.11.2025 அன்று நடப்பாண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் தொடங்கி வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, 20252026ஆம் கல்வி ஆண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவிபெறும் 178 பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 11,317 மாணவர்களுக்கும், 13,842 மாணவிகளுக்கும் மொத்தம் 25,159 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்று சூரமங்கலம் புனித சூசையப்பர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 442 மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில், மாநில அளவிலான "உலகம் உங்கள் கையில்" என்ற விழாவில், கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்து மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்கள்.

இத்திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 23 அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகள் பயிலும் 7,950 மாணவ, மாணவிகளுக்கும், 131 சுயநிதி கல்லூரிகளில் பயிலும் 15,561 மாணவ, மாணவியர்களுக்கும் என மொத்தமாக, 154 அரசு, அரசு நிதி உதவி பெறும் மற்றும் சுயநிதி கல்லூரிகளைச் சேர்ந்த 23,511 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, தற்போது அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகள் இறுதி ஆண்டிற்கு முந்தைய ஆண்டு பயிலும் 7,713 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கிடும் வகையில் இன்றைய தினம் தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியில் இறுதி ஆண்டுற்கு முந்தைய ஆண்டு பயிலும் 859 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் முதற்கட்டமாக சேலம் மாவட்டத்தில் 31,224 மடிக்கணினிகள் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது.

மடிக்கணினிகள் மற்றும் மிதிவண்டிகள் பெற்ற மாணவ, மாணவியர்கள் அதனை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதுடன் காலத்தையும், தங்களது படிப்பையும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு பல்வேறு துறைகளில் சாதிக்கும் அளவிற்கு சிறந்து விளங்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், சோனா கல்வி நிறுவனங்கள் தலைவர் சொ.வள்ளியப்பா, துணை தலைவர் தியாகு வள்ளியப்பா மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!

# ரூ.5000 வழங்கிய முதல்வருக்கு நன்றி!

## எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. தலைமையில்! கழகத்தினர் பங்கேற்பு!

பெரம்பலூர், பிப். 15-

பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் தலைமையில்,மகளிர் உரிமைத் தொகை ரூ.5000 வழங்கிய தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பட்டாசு வெடித்து கொண்டாடி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது!

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிருக்கு உரிமைத் தொகை பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களுக்கு 3000 மற்றும் கோடை கால ஊக்கத் தொகை ரூ.2000 அறிவித்தற்கு நன்றி தெரிவித்து,

பெரம்பலூர் நகர தி.மு.க. சார்பில் பெரம்பலூர் நகர 18 ஆவது வார்டில் உள்ள மகளிருக்கு பெரம்பலூர் நகர கழக செயலாளர் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் இனிப்பு வழங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பெரம்பலூர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர், பெரம்பலூர் நகர இளைஞர் அணி அமைப்பாளர் அஜீத், பெரம்பலூர் நகர தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தினேஷ், மகளிர் அணி நிர்வாகிகள் பொது மக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி பழைய பேருந்து நிலையத்தில் சீர்காழி சட்டமன்றத் தொகுதி தமிழ்நாடு தலைகுனியாது திராவிட மாடல அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பேசினார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், சீர்காழி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மு.தினேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்துமகேந்திரன், ஜி.என்.ரவி,மாவட்ட கழக துணை செயலாளர் மு. ஞானவேலன், சீர்காழி நகர கழக செயலாளரும், நகர் மன்ற துணைத் தலைவர் ம. சுப்பராயன் ஒன்றிய கழக செயலாளர்கள் செல்லசேது.ரவிக்குமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், மலர்விழி திருமாவளவன், பஞ்சு.குமார், வைத்தீஸ்வரன்கோயில் பேரூர் கழக செயலாளர் எம்.அன்புச்செழியன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் வைத்தீஸ்வரன்கோவில் எஸ். சுவாமிநாதன், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்காபரமேஸ்வரிராஜசேகர் மற்றும் பலர் உள்ளனர்.





ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், அதற்கு துணை போகும் அ.இ.அ.தி.மு.க.வைக் கண்டித்தும் புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் பனையப்பட்டியில் திருமயம் வடக்கு, தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றியச் செயலாளர்கள் இரா.கணேசன், அழகு சிதம்பரம் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை ரகுபதி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டப்பேரவை. உறுப்பினர் ராம.சுப்புராம், ஆர்எம்.கருப்பையா, இரா.மேகநாதன், சிவகுமார், அருண் சேகர், ஜான் பீட்டர், சீமானூர் கணேசன், முருகேசன், மாரிமுத்து, , , சாமி சுரேஷ், முல்லை ரமேஷ் உள்ளிட்ட காங்கிரஸ், விசிக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.